செ.வெ.எண்:-18/2020 நாள்:14.05.2020

திண்டுக்கல் மாவட்டம்

# கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நோயாளிகளின மருத்துவக் கழிவுகளை கையாளுவதில் முறையான நெறிமுறைகளை பொதுமக்கள் பின்பற்ற வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.

---

திண்டுக்கல் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட அனைத்து தனிமைப்படுத்தப்பட்ட முகாம்கள், வீடுகள்/வீட்டு பராமரிப்பு வசதிகள் மற்றும் பொதுமக்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மருத்துவ கழிவுகளை கையாளுதல், சேமித்தல், போக்குவரத்து செய்தல் மற்றும் வெளியேற்றுதலில் முறையான நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக தனிமைபடுத்தப்பட்ட மையங்கள் மற்றும் முகாம்களில் உள்ளவர்களிடம் இருந்து மருத்துவக் கழிவுகள் உருவாக்கப்பட்டதால் அதனை தனியாக பிரித்து மருத்துவக் கழிவுகள் சேகரிக்கப்படும் மஞ்சள் நிறகொள்கலன்களிலோ பைகளிலோ சேகரித்து, உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி பெற்ற துப்புரவு பணியாளர்களிடம் முறையாக ஒப்படைக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் நோய் தொற்றுக் காரணமாக வீடுகளில் தனிமைபடுத்தப்பட்டுள்ளவர்கள் உபயோகித்த கை உறைகள் மற்றும் முகக் கவசங்களை அகற்றுவதற்கு முன்பு 72 மணி நேரம் காகித பைகளில் பாதுகாப்பாக வைத்திருந்து பின்னர் பொதுக்கழிவுகளுடன் வெளியேற்ற வேண்டும். முகக் கவசங்களை மறு உபயோகப்படுத்த முடியாத வண்ணம் வெட்டி துண்டுகளாக்கி வெளியேற்றபட வேண்டும்.

பிற கழிவுகளுடன் கொரோனா வைரஸ் நோய் தொற்று நோயாளிகளின் கழிவுகளை சேர்க்கவோ சேமிக்கவோ கூடாது. 24 மணி நேரங்களுக்கு மேல் கொரோனா வைரஸ் நோய் தொற்று நோயாளிகளின் கழிவுகளை சேமித்து வைத்தல் கூடாது. கொரோனா வைரஸ் நோய் தொற்று அறிகுறியுள்ள பணியாளர்களை அனுமதிக்கக்கூடாது.

சர்வதேச பரவலாகியுள்ள கொரோனா உயிர்க் கொல்லி நோயிடம் இருந்து மீள மேற்கண்ட வழிகாட்டுதல்களின்படி தனிமைப்படுத்தப்பட்ட முகாம்கள் அல்லது வீடுகள் வீட்டு பராமரிப்பு வசதிகள் மற்றும் பொதுமக்கள் மேற்கூறிய நெறிமுறைகளை பின்பற்றி மருத்துவக் கழிவுகளை கையாள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---